

ஜம்புகேசுவரம்.

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 11.

பிங்களஹ பால்குன சுத்தபஞ்சமி.

வியாஸாசலீயம்,

(முன்தொடர்ச்சி.)

शिवमुदीक्ष्य तपश्चरतीत्यसौ श्रुतमिदं पुर एव मयापरात् ।
स परवान्स्वपदाब्जनिषेवणान्मृगदृशः सकलं परिदास्यति ॥ ३३ ॥

இந்த முனியானவர் பரமசிவனை யுத்தேசித்துத் தவம் செய்கிறாரென்று முன்னமேயே என்னால் கேட்கப்பட்டிருக்கிறது. இவ்விதமே வேறுசிலர் மூலமாகத் தன்னிடத்தில் அன்பு பாராட்டும் ஸ்திரீகளுக்குச் சுவாதீனமாயிருந்துகொண்டு அவர்களின் எவ்வித இஷ்டத்தையும் கொடுக்கிறாரென்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

द्रुतमुपेत्य कुमारवनस्थलीं विहृत तत्तप आदरतस्त्रियः ।
मुनिवरं तपसो विनिवृत्य तं पुनरिहेत यथायतनं भृशम् ॥ ३४ ॥

ஹே! தேவஸ்திரீகளே, முனி குமாரன் தபஸ் செய்யும் வனத்தைச் சீக்கிரமாயடைந்து மிகுந்த பிரியத்தை யவனிடம் பாராட்டி அந்தத் தவத்தைக் கெடுத்து அவனையும் அதிலிருந்து திருப்பிவிட்டு மறுபடியும் உங்கள் ஸ்தானத்தை அடையுங்கள்" என்று இந்திரன் கூறினார்!

निगदिता हरिणेति सुराङ्गना हरिहयाय ददुर्वचनं प्रति ।
अवहितः शृणु नो वचनं विभो वयममूर्कवने तव संस्थिताः ॥ ३५ ॥

இவ்விதம் இந்திரனால் சொல்லப்பட்ட தேவஸ்திரீகளானவர்கள் இந்திரனைப் பார்த்து "நாங்கள் உங்கள் வார்த்தைகளிற் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறோம்; ஆனாலும் எங்கள் விக்ஞாபனத்தைத் தாங்கள் தயை செய்து ஜாக்கிரதையாய்க் கேட்கவேண்டு" மென்று தெரிவித்து அடியில் வருமாறு அறிவிக்கிறார்கள்.

युवसु लुब्धपदा वयमीदृशाः स तु न वेत्ति विभो युवतीहितम् ।
स किल पञ्चसमस्तपसाधिको ध्रुवमसौ वितरिष्यति शापकम् ॥ ३६ ॥

"எங்களைப் போன்றவர்கள் யுவாக்களாயிருப்பவர்களிடம் தங்கள் சாமர்த்தியத்தைக் காண்பித்து அவர்களைச் சுவாதீனப்படுத்துவார்கள். யுவதிகளிடத்தில் ஏற்படும் சுகத்தை யவர் அறியத்தகுந்தவரல்லர். அவர் ஐந்து வயதிலிருப்பவராயினும் தவத்தால் மிகச் சிறந்தவராயிருக்கிறபடியால் அவரிடம் சென்றால் சாபத்தைக் கொடுப்பார். இது நிச்சயம்.

नहि वयं शलभायितुमीश्महे मुनिवरस्य रुडुग्रहुताशने ।
निपातिता बहवोऽपि पुरतना मुनिजनानभिविश्य तपस्यतः ॥ ३७ ॥

நாங்கள் அந்த முனி சிரேஷ்டருடைய உக்கிரமான கோபாக்னியில் சலபமென்னும் பூச்சியைப்போல் விழுந்து நாசத்தை யடைவதற்குச் சமர்த்தர்களல்லர். முன்னிருந்த பலர் தவஞ்செய்யும் முனிவர்களை அவமதித்து அதனால் நாசத்தை யடைந்துவிட்டார்கள்.

स तव किं प्रविधास्यति बालकः स्पृहयति प्रथितो न पदाय नः ।
अपदसंभ्रमिता परभीरुता प्रकृतिसिद्धमिदं द्वयमिन्द्र ते ॥ ३८ ॥

பின்னும் பாலகனை அம்முனிவர் உம்மை என்ன செய்யப்போகிறார். மிகவும் பிரசித்திபெற்ற அவர் உம்முடைய ஸ்தானத்தில் இச்சை வைக்கமாட்டார். ஹே! இந்திரா; அகாலத்தில் ஏற்படும் பரபரப்பு பிறரிடத்தில் பயப்படும் தன்மை ஆகிய இவ்விரண்டும் உமக்கு இயற்கையாயுண்டாயிருக்கின்றன."

इति वचः श्रुतवान्बलसूदनः प्रतिजगाद चलाधरपल्लवः ।
भगवता भजताशु विगायनाः कुटिलचारुवचो हृतमानसाः ॥ ३९ ॥

இவ்விதம் அப்ஸரஸ்திரீகளால் கூறப்பட்ட வசனத்தைச் செவியுற்ற பலாசுரனுக்குச் சத்ருவான இந்திரன் கோபத்தால் துடிக்கிற உதடையுடையவனாய்க்கொண்டு அவர்களைப் பார்த்து, "வக்ரமாயும் அழகாயுமிருக்கும் வசனங்களினால் அபகரிக்கப்பட்ட மனதை யுடையவர்களாயும் தாசித் தொழிலை யடைந்தவர்களாயுமிருக்கும் நீங்கள் சீக்கிரமாகப் போங்க"ளென்று பதிலுரைத்தான்.

प्रथितमस्त्रमिदं द्वयमेव मे कुलिशमेकमरातिषु दुर्जयम् ।
मुनिजनेषु तपस्विषु वो वपुस्तदपि कुण्ठतमद्य भयंकरम् ॥ ४० ॥

மறுபடியும் அப்ஸரஸ்திரீகளைப் பார்த்து இந்திரன் சொல்லுகிறான். "எனக்குப் பிரவித்தமாயிருக்கும் அஸ்திரங்கள் இரண்டுதான். அவைகளில் சத்ருக்களால் ஜயிக்கமுடியாத குலிசம் என்கிற பெயர்கொண்ட அஸ்திரம் ஒன்று; தவம் புரியும் முனி ஜனங்களை ஜயிக்கக்கூடிய உங்கள் சரீரம் இரண்டாவது. சத்ருக்களுக்குப் பயத்தை உண்டுபண்ணும் அதுவும் இப்பொழுது குண்டிதமாய் விட்டது.

व्यसनकालबहिःस्थितिशालिभिः परिजनैः फलमस्ति न किंचन ।
द्रुतमितोऽपसरंतु वराङ्गना न मम दृष्टिपथे चरताधुना ॥ ४१ ॥

துக்கம்நேரும் காலத்தில் வெளியில் மறைந்திருக்கும் வேலைக்கார ஜனங்களால் அற்பமேனும் பயனில்லை. ஆகையால் ஹே! தாஸிகளே, சீக்கிரமாகவே என் பார்வைக்குத் தென்படாமல் ஓடுங்கள்" என்றான்.

इति वचः समुदीर्य पुरन्दरः परिजनैः सहितो विधिविष्टपम् ।
उपययौ स ददर्श चतुर्मुखं व्यसनमाह्वगसूसुचदुत्थितम् ॥ ४२ ॥

இந்திரனானவன் இவ்விதம் சொல்லிவிட்டுப் பரிஜனங்களுடன்கூட பிரம்மாவினுடைய லோகத்தை யடைந்து பிரம்மாவையும் பார்த்து தற்காலம் இவ்வித துக்கம் உண்டாயிருக்கிறதென்று அறிவித்தான்.

मुनिशिशुर्भगवन्नतिमानुषं चरति तीव्रतपस्तत उत्थितम् ।
मह इदं भुवनानि तु बाधते न परिसंचरितुं क्षमते जनः ॥ ४३ ॥

பூஜ்யரான ஹே! சதுர்முகரே, அந்த முனிபாலனானவன் மனிதர்களுக்கு அசாத்தியமான கடூரமான தவத்தைச் செய்கிறான். அந்த தவத்தினின்றும் உண்டான இந்தத் தேஜஸ்ஸானது உலகங்களை கஷ்டப்படுத்துகின்றது. ஜனங்களுக்கும் ஸஞ்சாரம் செய்யமுடியவில்லை.

भुवनस्रष्टुरिमां भगवन् स्वयं कृतवता परिरक्षणमन्वपि ।
खलु विधेयममुष्य ममेप्सितं श्रुतिविपां परेण विधीयते ॥ ४४ ॥

ஹே பகவன், இப்பூமியைச் சிருஷ்டித்தவரான உம்மால் பரிபாலனமும் அவசியம் செய்யப்படவேண்டுமன்றோ? வேதபடனத்தில் விருப்பமுள்ள நீர் உலக ரக்ஷணத்தைச் செய்தால் என் இஷ்ட பூர்த்தியும் அதுதான்.

हरिहयेन गिरं समुदीरितां श्रुतवता प्रतिवाक्यमुपाददे ।
कमलजेन जगन्ति यतो भवन्यत इमाः श्रुतयश्च बभासिरे ॥ ४५ ॥

सृष्टिमात्रकरणे न्ययुङ्क्त मामीश्वरो हरिमधिष्ठितवान् स्थितौ ।
तद्वयं भुजगशायिनं हरिं यामं दुग्धजलधिं स्म वीक्षितुम् ॥ ४६ ॥

பச்சைக் குதிரையை யுடைய தேவராஜனால் சொல்லப்பட்ட வசனத்தைக் கேட்ட பிரம்மாவால் மேல் வருமாறு பதில் கூறப்பட்டது. யாரிடமிருந்து சகலஜகத்தும் உண்டாயிற்றோ எவரிடமிருந்து இந்த வேதங்கள் யாவும் பிரகாசிக்கின்றனவோ அந்த ஈசுவரன் ஜகத்ஸிருஷ்டி செய்வதில் மாத்திரம் என்னை நியமித்திருக்கிறார். பரிபாலன விஷயத்தில் ஹரிதான் சக்தர். ஆகையால் புஜகசாயியான விஷ்ணுவைப் பார்ப்பதற்கு நாமெல்லோரும் திருப்பால் கடலை யடைவோம்.

विधिवचः प्रतिगृह्य पुरन्दरप्रभृतयो विधिनैव ततः सुराः ।
आभययुर्हरिदर्शनलालसा अमृतवारिनिधिं सहितास्तदा ॥ ४७ ॥

பிரம்மாவினுடைய அபிப்பிராயத்தை யறிந்த புரந்தரன் முதலிய விண்ணவர்கள் அவருடன்கூடவே ஹரியைப் பார்க்கவேண்டுமென்கிற இச்சை யுடையவர்களாய்க்கொண்டு க்ஷீரசமுத்திரத்தை யடைந்தார்கள்.

विबुबुधे विबुधाधिपतिर्हरिः सुरवरागमनेन समं समः ।
तदिह शक्रमनोरथसूचकं यदनिशं शयितोऽपि विबुद्धवान् ॥ ४८ ॥

சுரசிரேஷ்டர்கள் க்ஷீரசமுத்திரத்தை யடைந்தவுடன் தேவதைகளுக்குப் பதியாகிய விஷ்ணுவும் யோகநித்திரையிலிருந்து விழித்துக் கொண்டார். எப்பொழுதும் நித்திரையிலிருப்பவர் இந்திரன் முதலியவர்கள் போனவுடன் விழித்துக்கொண்டதிலாவது இஷ்டபூர்த்தியாகுமென்று அறிவிக்கப்பட்டது.

स तमुदैक्षत देवमनिन्दितं सुरगणः सुरवर्यपुरःसरः ।
भुजंगभोगनिविष्टमभीष्टदं सजलनीरदवर्णसमद्युतिम् ॥ ४९ ॥

ஸகல தேவதைகளும் இந்திரனை முன்னிட்டு ஆதி சேஷனாகிய படுக்கையிலிருப்பவரும் நீருண்டமேகம்போல் கருப்பான சரீரகாந்தியுடையவரும் விரும்பியதை யளிப்பவரும் சிறந்த தைவமாயுமிருக்கும் ஸ்ரீ ஹரியைப் பார்த்தார்கள்.

(இன்னும் வரும்.)

ஒரு சம்பாஷணை.

பாலசந்திர தீக்ஷிதருக்கும் குமுதாகர சாஸ்திரிகளுக்கும் நடந்தது.

(முன்தொடர்ச்சி.)

பாலசந்திர தீக்ஷிதர்—கஷ்டம், ஓய், இவ்விதம் அதிகமான விரோதமிருக்குங்கால் பிரத்தியக்ஷ வசனத்திற்கு இந்தக் கீதையை எப்படி லக்ஷ்யமாகச் செய்கிறீர்.

குமுதாகர சாஸ்திரி—நான் லக்ஷியமாகச் செய்யவில்லை, எழுதியிருப்பதை மாத்திரம் சொன்னேன்.

பா—உலகத்தை வஞ்சிக்கின்ற வழியானது மிகவும் நன்றாயிருக்கிறது. சுலோகங்களுடைய ஸங்கியையில் வித்தியாசம் இவ்வளவுதானா?

கு—உபோத்காதத்தினுடைய ஆறுவது பக்கத்தில் கூறப்பட்ட வேறான நாரதர் வசனமுமிருக்கின்றது.

பா—நாரதர் என்பவர் யார்?

கு—எவர் சுத்தாரியர்களால் தங்களுக்கு உபதேசிக்கும் சித்தராகக் கூறப்படுகிறாரோ அவர் தான்.

பா—அப்படியானால் ஹம்ஸாதிகளில் இருவரும் ஒருவராகத் தெரிகின்றது. சொல்லும் அவர் வசனத்திலிருக்கும் விசேஷத்தையும் கேட்போம்.

கு—षट्सप्तत्युत्तरं पञ्चशतं प्राह स योगिराट्।
श्लोकानाञ्चैव गीताभिः चतुर्विंशतिभिः परः ॥

என்கிற இவ்வசனத்தால் இந்தக் கீதைக்கு 576 சுலோகங்களென்று தெரிகின்றன. இதற்கு முகவுரையெழுதியவர் 18 பக்கத்தில் இவ்வசனத்திற்கு இந்தப் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானால் अशोच्यानन्वशोचस्त्वं என்பது துடங்கி—मोक्षयिष्यामि मा शुचः। என்கிற பரியந்தம் 576 சுலோகங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது என்று கருதுகின்றார். இங்கு நூலாசிரியர் குறிப்பிட்ட இடத்தில் 612 சுலோகங்கள் தானிருக்கின்றன.

பா—இதுவே என்ன இது ஒன்றுக்கொன்று சம்பந்தமன்றியில் வெவ்வேறாகக் கூறப்பட்டிருக்கின்றனவே. தன புத்திக்குத் தோன்றியவாறு கூறுகிறவர்களுக்கு இவ்வித முரைப்பதுதான் அழகு. இது இருக்கட்டும் வேறொன்று கேட்கிறேன். பிரமாணமாகக் கூறப்பட்ட வசனங்களையும் முகவுரையைச் செய்தவர் வசனங்களையும் ஒருவரே செய்தாரென்பதற்கு ஞாபகமான அடையாளமிருக்கின்றதா?

கு—அடையாளமிருக்கின்றது, ஆனாலும் ஒருவரென்று எவ்வாறு நிச்சயிக்க இயலும்.

பா—நன்கு நிச்சயிக்கப் படவேண்டாம். அடையாளமிருக்குமாகில் கூறும்.

கு—पूर्णसूरिणः என முன் கேட்கப் படாததான நகாராந்தமான சூரி பதம் ஒன்று. कृष्णमूर्तिना என்று முன்னோர்

களின் பெயரில் காணப்படாததான கிராமவாசிகளால் சொல்லப்படும் கிருஷ்ணமூர்த்தியென்கிற பதத்தால் பகவானைக் கூறுவது மற்றொன்று. இவ்விதம் சுலோகங்களிலும் வாக்கியங்களிலும் கவனித்துப் பார்த்தால் பல அடையாளங்கள் கிடைக்கலாம்.

பா—இயற்றியவர் ஒருவர் என்கிற விஷயத்தில் உமக்கு நிச்சயம் வரவேண்டாம். நாரதர் கோபிலர் முதலியவர்கள் எல்லோரும் காரியத்தின் வேற்றுமையால் வேறு பெயரையடைந்த கலிபுருஷன்தான் என்று நான் எண்ணுகிறேன்.

கு—அப்படியானால் உமது அபிப்பிராயத்தைக் காட்டிலும் வேறுவிதமாக எனக்கு இருக்குமென்று நீர் எண்ணுதேயும்.

பா—இஃது இருக்கட்டும். கதையினுடைய விசேஷத்தைக் கொஞ்சம் கேட்போம். அதையும் சொல்லும். முதல் அத்தியாயத்தின் கருத்து யாது?

கு—நீர் கவனமுடன் கேளும். முதலில் துரியோதனன் துரோணாசாரியரை யடைந்து தன் சைந்யத்திற்கும், சத்துரு சைந்யத்திற்குமிருக்கும் பலாபலன்களைக் கூறி பீஷ்மரை ரக்ஷிப்பதற்கு வேண்டுகின்றான். பீஷ்மரானவர் அச்சமயம் சிம்மநாதத்தை உபதேசம் செய்கிறவராய்க் கொண்டு யுத்தத்திற்கு உபக்கிரமித்தார். அதற்குப் பிறகு எல்லோரும் அவரவர்களின் சங்கங்களைக் கானம் செய்தார்கள். பிறகு ஸங்கல்பநாதனுடைய உபதேசத்தால் மற்றொரு ஸங்கல்பநாதர் துர்க்காதேவியை 13 சுலோகங்களால் துதித்தார்?

பா—ஸங்கல்பநாதர் என்பவர்கள் எவர்கள்?

கு—இதை மிகவும் ரகஸ்யமென்றறியும். ஸங்கல்பநாதர் என்றால் நரநாராயணர்களுடைய அவதார பூதர்களா

யும் பூஜ்யர்களாயுமிருக்கும் கிருஷ்ணன் அர்ச்சுனன் இவர்களுக்கு இப்பெயர். அப்பெயரும் சுத்தார்ய மண்டலத்தில் பிரசித்தம்.

பா—இவ்விதம் பெயர் ஏற்பட்டதற்கு யாது காரணம்?

சு—எவர்கள் அம்மண்டலத்தில் கூடியிருக்கிறார்களோ அவர்களையேகேட்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களைத்தான் எதற்குக் கேட்கவேண்டும். சுத்தார்யர்களுடைய சங்கல்பந்தான் இதற்குக் காரணமென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது.

பா—இப்பெயரானது மிகவும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறது. இது இருக்கட்டும். பூஜ்யர்களான நரநாராயணர்களுடைய கதையின் பாக்கியையும் சொல்லும்.

சு—அதற்குப் பிறகு சந்தோஷத்தை யடைந்து துர்க்காதேவியானவள் அர்ச்சுனனையும் பொருட்டு வரமளித்தாள். அர்ச்சுனனும் கிருஷ்ணனுடன் கூட சேனையின் பதியை யடைந்தான். அவ்விடத்தில் பீஷ்மர் முதலிய பந்துக்களைப் பார்த்து அதிக துக்கத்தால் ஒன்றும் தோன்றாதவனுப்க் கொண்டு வார்த்தைகளால் தனக்கிருக்கும் உத்ஸாக பங்கத்தைக் காண்பித்தான்.

பா—என்ன ஆச்சரியம். கதையின் சம்பந்தமானது மிகவும் அழகாயிருக்கின்றது. இதிலிருக்கும் சுலோகங்கள் புராண கீதையிலும் சில கிடைக்குமா?

சு—என்ன தாங்களிவ்விதம் கேட்கின்றது? பார்த்தன் பொருட்டு ஸங்கற்பநாதனால் எந்தக் கீதை உபதேசிக்கப்பட்டதோ அதானது இந்தப் புராண கீதையே. இந்தச் சுத்தார்ய கீதையில், முதல் அத்தியாயத்தில் சுலோகங்கள் 54. புராண கீதையில் 46 சுலோகங்களி

ருக்கின்றன. இரண்டிலும் சாதாரணமாயிருக்கும் சுலோகங்கள் 30, சுத்த கீதையில் அதிகமாய் 24 சுலோகங்களிருக்கின்றன. இந்தச் சுலோகங்கள் புராண கீதையில் ஓரிடத்திலாவது காணப்படவில்லை. இரண்டிலும் பொதுவாயிருக்கும் சுலோகங்களிலும் முன் பின என்கிற கிரமமும் நவீன கீதையில் விஷயத்தை யனுசரித்து அபூர்வமாய்ப் புதிதாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பா—அவ்விஷய மென்ன ?

கு—விஷயமானது முகவுரையில் 12-வது பக்கம் முதல் மூன்று பக்கங்களால் முதல் அத்தியாயத்தால் ஞானாதிகாரம் சித்திப்பதற்காகயான சக்தியைக் கிரகித்துக் கொண்டு குருவை யடைகிறதும் இரண்டாவது அத்தியாயம் முதல் கிரமமாய்க் காயத்திரிக்குப் பொருளாகிய—24—தத்துவங்களின் நிரூபணமும் முடிவிலிருக்கும் அத்தியாயத்தில் பிரமஸ்துதி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

பா—இவ்விஷயங்களெல்லாம் அதிலிருக்கின்றனவா ?

கு—முகவுரையிலறியப் படுகின்றதென்று சொல்லியிருக்கின்றேனே. தற்காலம் விளங்கும் எவ்வித் சிறந்த பண்டிதர்களாலும் நூறு வருஷம சிரமப்பட்டாலும் கீதா பாடத்தால் விஷயங்களை யறியமுடியாது. அதின் ஞானமானது சுத்தாரியர்களுடைய பிரசாதத்தால் தான் உண்டாகவேண்டும்.

பா—அப்படியானல் எவர்களுக்கு இதை யறிந்துகொள்ள விருப்பமிருக்கின்றதோ அவர்கள் சுத்தார்யர்களை உபாசிக்கவேண்டும். இவ்விதம் மற்றுமுள்ள அத்தியாயங்களிலும் சில கீதா சுலோகங்கள் காணப்படுகின்றனவா ?

கு—காணப்படுகின்றன. அவைகளும் முதல் அத்தியாயம் போல் அபூர்வமாகத்தானிருக்கும். இந்தக் கீதையில் பிராசீன கீதையிலில்லாததான சுலோகங்கள் 46 அதிகம் காணப்படுகின்றன. அவைகள் பாரதத்தினின்றும் எடுக்கப்பட்டிருக்கின்றனவென்று இதை இயற்றியவராலேயே பிரதிக்ஞை செய்யப்பட்டிருக்கின்றது. புராண கீதா சுலோகங்களில் தள்ளப்பட்டவைகள் 41. இங்கு மற்றுமோர் விசேஷமுண்டு. அதாவது இரண்டாவது அத்தியாயத்தில் நான்காவது சுலோகம் முதற்கொண்டு 25-வது சுலோகம் வரையில் (22 சுலோகங்கள்) ஆநுசாஸநிக பர்வத்தில் 46-வது அத்தியாயத்திலிருந்தும் எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன. அந்த அத்தியாயத்தில் ஸ்ரீமந்நாராயணனால் கருடனையும்பொருட்டு 70 சுலோகங்களால் ஆத்மதத்வோபதேசம் செய்யப்படுகின்றது என்று கூறும் இந்நூலாசிரியராலுமிவ்வித மங்கீகரிக்கப்படிருக்கின்றது. பாரதத்திலிருக்கும் கிரமத்தை இங்கு ஏற்றுக்கொள்ளவில்லை. சில சுலோகங்களும் சுத்தம் பண்ணப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. அவையாவன:—

मनोबुद्धिगतः श्रेयः विदधाति विहंगम ।
मातुं ज्ञातुं कृता बुद्धिः भवता पक्षिसत्तम ॥
तदाहं समंत्र्यर्थं मूर्तिमान् भविताण्डग ।

பா—உலகத்தை வஞ்சிப்பவர்களுக்குப் பசங்களை மாற்றுவதெனபது ஒருபொருட்டாக தோன்றுமா என்ன. இதற்கு என்ன கெதி ஏற்படப்போகின்றதோ? பாரதமென்று பெயர்கொண்ட இதிஹாஸ ரத்னமானது இவ்விதம் ஆக்கிரமிக்கப்பட்டதே என்று என் மனமானது மிகவும் நடுக்கமுற்றுத் துக்கத்தை யனுபவிக்

கின்றது. இது இருக்கட்டும். இயற்றியிருக்கும் கிரமம் எப்படி?

கு—இதை நன்றாய்க் கூறலாம். இதில் எல்லா அத்தியாயங்களிலுமிருக்கும் சுலோகங்கள் பெரும்பாலும் கீதையிலுள்ளவைகளே. இவ்விஷயத்தில் இந்தக் கிரந்தகர்த்தர்வாலும் அற்பமுபகாரம் செய்யப்பட்டிருக்கின்றது.

பா—என்ன உபகாரம்?

கு—இந்த நவீன கீதையிலிருக்கும் புராண கீதையினுடைய சுலோகங்களைப் பிரத்தியேகமாய் 100 பக்கத்திற்குமேலுள்ள 15 பக்கங்களால் நன்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பா—இது நல்ல நடத்தையைக் காண்பிக்கின்றது. கீதையை நாசம் செய்வதில் தனக்கிருக்கும் பிரதாபத்தையன்றோ கவி பிரசித்தி பண்ணுகிறான்!

கு—மனிதர்களைப் பொறுத்து இவ்விரண்டு ஏற்படலாம். சுத்தார்யர்களின் அபிப்பிராயப்படி இது ருஜுவான வார்த்தையே. இதர ஜனங்களின் அபிப்பிராயப்படி வேறு விதம் தான்.

பா—இந்தக் கீதையானது புராண கீதையினின்றும் ஒவ்வொரு சுலோகமாக தான் எடுத்து இயற்றப்பட்டிருக்கின்றதோ. அல்லது பாதிபாகவும் கால்பாகமாகவும் கூட எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றதோ.

கு—எங்கும் பூர்ண சுலோகமேயன்றி ஏகதேச பாகத்தை ஓரிடத்திலும் எடுத்துக் கூறவில்லை.

பா—கீதர் சுலோகங்களிருக்கும் தன்மையைக் கவனித்தால் ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறது. ஒரு சமயம் சுலோகங்களைப் பிரித்துத் துண்டு செய்யாமல் இவ்

விதமும் தற்செயலால் நேர்ந்திருக்கலாம். ஆகையால் இதில் ஆச்சரியப்பட நியாயமில்லை. நம் கீதா சுலோகங்களுக்கிருக்கும் பூரண ஆயுளே இதற்குக் காரணமாயிருக்கலாம். இதுபோதும். இந்தக் கீதையானது எந்தச் சமயத்தை யனுசரித்து ஏற்பட்டிருக்கின்றது.

கு—வைதிக சமயமோ அல்லது லோக பிரசித்தமோ இது ஒன்றையும் அநுசரித்து இது ஏற்படவில்லை.

பா—அப்படியானால் இந்த கீதை பொருளற்றதாக வல்லவோ ஆகும். சாஸ்திரத்திற்குத் தன்னால் விவக்ஷிக்கப்பட்ட யாதாகிலும் ஒரு பொருள் அவசியமிருக்கவேண்டுமே?

கு—உண்மையே. எல்லாவற்றிற்கு மூலமான ஸநாதன தர்மமென்று பெயர் வாய்ந்த ஒரு விஷயம் இதற்கு முன்தான் இவ்விதம் முகவுரையின் ஏழாவது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பா—அதென்னனம்.

கு—தேசத்தையும் காலத்தையும் அனுசரித்துத் தர்மங்களில் சிலவற்றை விலக்கவும் சிலவற்றைக் கிரகிக்கவும் வேண்டும். சித்தார்யர்களையும் அவர்களுடைய சாஸ்திரங்களையும் பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது.

பா—இது இருக்கட்டும். சித்தர்களன்றோ சுத்தமான சாஸ்திரங்களை யுபதேசிப்பவர்கள். அச்சித்தர்கள் எங்கு வசிக்கிறார்கள். அவர்களால் உபதேசிக்கப்படும் சாஸ்திரங்களெவைகள்.

கு—கஷ்டம். இதைக்கூட நீர் அறிந்துகொள்ளவில்லையா. அஜீர்ணாரண்ய மென்கிற ஆலமரமொன்றிருக்கின்றது. அதிலல்லவோ அவர்கள் வசிக்கிறார்கள்.

பா—அந்த வட விருக்ஷமானது எது?

கு—நன்கு பிரசித்தமாயிருக்கும் இதுகூட உங்களுக்குத் தெரியாதா? அம்மரமானது தஞ்சாவூர்ஜில்லாவைச் சேர்ந்த சாலியமங்கலத்திற்கு அருகிலிருக்கின்றதாகக் கேட்கப் படுகின்றது.

பா—அஜீர்ணபர்ணமென்கிற இப் பெயருக்குப் பொருளென்ன?

கு—பழுத்துக்கீழே விழாமலிருக்கும் இலைகளையுடையதென்பது அதற்குக் கருத்து.

பா—இது உண்மைதானா?

(இன்னும் வரும்.)

ஆரியஸ்திரீ தர்மம்.

நம்முடைய தர்மத்திற்குப் பொதுவான பெயர் "ஸநாதன தர்மம்" எனப்படும். இந்த ஸநாதன தர்மத்திற்கு முதல் புதல்வனும் வர்ணாச்ரமதர்மம். ஸ்திரீ தர்மம் என்பது வர்ணாச்ரம தர்மத்தின் ஒரு பாகமாகும். இந்த வியாஸத்தில் முதலில் ஆரிய ஸ்திரீகளுக்கு வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் என்ன தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன? இரண்டாவது, இப்பொழுது நம் ஸ்திரீகளின் நிலைமை யாது? மூன்றாவது, எப்படி நாம் இந்த சீர் திருத்தம் செய்யவேண்டும்? ஆகிய இவற்றை முறையே தீர்மானிப்போம்.

ஸ்திரீ என்பவள் பார்யை அதாவது சாஸ்திரப்படி விவாகஞ் செய்துகொள்ளப்பட்டவள். பின்வரும் சுலோ இதை நன்கு விளக்குகிறது.

सा भार्या या गृहे दक्षा सा भार्या या प्रियंवदा ।
सा भार्या या पतिप्राणा सा भार्या या पतिव्रता ॥

இதன் பொருள் என்னவெனில் எந்த ஸ்திரீயானவள் தன் வீட்டு காரியங்களில் ஸமர்த்தையாயும், பர்த்தாவிடத்தில் பிரியம் பேசுகிறவளாயும், அவனையே தன் உயிராக நினைப்பவளாயும், பதிவிரதாசிரோமணியாகவும் இருக்கிறாளோ அவள்தான் ஸ்திரீ. அவளைத்தான் பாரியை எனக் கூறலாம். மனு, ஸ்திரீ தர்மத்தைப்பற்றிச் சொல்லும் பொழுது தம் ஸ்மிருதியில் எழுதுகின்றனர்.

विशीलः कामवृतो वा गुणैर्वा परिवर्जितः ।
उपचर्यः स्त्रिया साध्व्या सततं देववत्पतिः ॥

அதாவது நாயகனானவன் நல்லொழுக்கமில்லாதவனாயிருந்தாலும், காமாதுரனாகவிருந்தாலும், நற்குணங்கள் இல்லாதவனாயிருந்தாலும் தர்மபத்னியானவள் அவனைக் கடவுள் போல் எப்பொழுதும் உபசரிக்கவேண்டும். ஸ்திரீகளுக்குத் தெய்வம் பர்த்தா என்று வேதங்களும் இதிஹாஸங்களும் முறையிடுகின்றன. அந்தப் புருஷன் முட்டாளாயிருப்பினும், தரித்திரனாயிருந்தாலும், ரூபலாவண்யங்கள் இல்லாதவனாயிருப்பினும் ஸ்திரீ அவனைத் தெய்வமாய் நினைத்து உபசரிப்பதே அவள் கடமை.

இக்குணங்கள் நிரம்பிய மனைவிகளைப் புருஷர்கள் ரக்ஷிக்கவேண்டும். அப்படியில்லாவிடில் பர்த்தா விஷயத்தில் பிரியமில்லாதவளும், துன்மார்க்கத்தில் பிரவேசிப்பவளும், குஷ்டமுதலான நித்திய வியாதிகளை உடையவளும், புருஷன் மனத்திற்கு விரோதமாக நடப்பவளும்,

அவனைத் தெய்வமாக எண்ணிப் பூஜிக்காதவளுமாயிருக்கிற ஸ்திரீகளைத் தள்ளிவிட்டு வேறு விவாகஞ் செய்து கொள்ளலாம் என்று முன் கூறிய மனு ஸ்மிருதியே கூறுகின்றது. ஆகையால் கணவன் சொல்படி நடத்தலே ஸ்திரீகளுக்குப் பெரிய தருமமாகும்.

"सा भार्या या गृहे दक्षा" என்பதை விஸ்தாரமாய் விசாரிப்போம். கிருஹத்தில் ஸ்திரீகள் சோம்பல் காண்பிக்கக் கூடாது. மாமனார், மாமியார், நாத்தனார் முதலான பெரியோர்களுக்கு கீழ்படிதல் வேண்டும். செய்யத் தகாத வேலையைக் கணவன் கட்டளையிட்டாலும் செய்கிறவள் தான் தர்மபத்னி என்று சொல்லும் சாஸ்திரத்தின் தாத்பரியம் என்னவெனில் கீழ்படிதல் (obedience) அவசியம் வேண்டுமென்பதைக் காண்பிக்கிறது. வேலைக்காரர்களை ஹிம்ஸிப்பது, பெரியோர்களை அவமதிப்பது, கணவன் வார்த்தைகளைக் கேட்காமலிருப்பது ஸ்திரீகளுக்கு ஒரு பெரிய குற்றம் என்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. குடும்பத்தை மேன்மேல் விருத்திக்குக் கொண்டுவருகிறவளாயும், புருஷன் வருவாய்த் தக்கபடி செலவு செய்கிறவளாயும், தன் ஸம்ஸார சிந்தனையுள்ளவளாயும் வீட்டுக் காரியங்களான சமையல் முதலான விஷயங்களில் தேர்ச்சியுள்ளவளாயும், வீடுவாசல்களை அடிக்கடி சுத்தம் செய்து மனதிற்குச் சந்தோஷம் கொடுக்கும்படி செய்கிறவளாயும் இருக்கவேண்டும். மறுபடி நாதன் படுத்த பிறகுதான் நித்திரைக்குப் போகவேணும். அவர் எழுந்திருக்கும் முன் தான் எழுந்திருந்து வீடுகளைச் சுத்தி செய்யவேண்டும். ஒருபொழுதும் விஸனம் காண்பிக்கக் கூடாது. மலர்ந்த முகமும் ஸௌகயமான பேச்சும் ஒரே மங்களமாயிருத்தல் வேண்டும். இதுதான் குடும்பத்தை விருத்தி செய்யும் என்பது திண்ணமே. सा भार्या या पतिप्राणा என்றும் விஷயத்

த்தைச் சற்று ஆலோசிப்போம். கணவன் வெளியே போயிருந்தால் அவன் வீடு வந்தவுடன், அவனுக்கு வேண்டிய சுச்ரூஷைகள் செய்து, அவனுக்குப் பிரியமுள்ளதான சமையல் செய்து, நன்றாய்ப் பக்குவம் பண்ணி, அவன் தேகத்தைத் தன்னுடையதாக எண்ணி அவனுக்குச் சுகம் உண்டாக்கும் வழியைத் தேடுவதே மனைவியின் கடமையாகும். கணவனோடு பேசும்பொழுது அவன் மனத்திற்கு ஆஹ்லாதம் கொடுக்கும்படி தேன்போல் பேசி அவனுக்கு இன்பத்தைக் கொடுக்கவேண்டும். அவன் ஏதாவது வியாதி முதலானவைகளால் பீடிக்கப்பட்டாலும், தன் உயிர்போல் பாவித்து வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டும். சந்நியாஸினிகள், மருந்திடுகிறவர்கள், படிப்பில்லாதவர்கள் கெட்ட நடத்தை உள்ளவர்கள் இப்பேற்பட்ட ஸ்திரீகளோடு சேரக்கூடாது. வீட்டைவிட்டு வெளியில் புருஷன் இல்லாமல் கோவில்கள், ஆறுகள், குளங்கள், உத்ஸவங்கள், விரதானுஷ்டானங்கள் முதலிய நல்ல காரியங்களில் கூடப் பிரவேசிப்பது ஸ்திரீகளுக்குப் பிசகு என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அவர்களை "அந்தப்புரவாஸிகள்" என்று சொல்வது வழக்கமே.

கணவன் தேசயாத்திரை சென்றாலும், வேறு எவ்விதத்தாலும் மனைவியைவிட்டுப் பிரிந்தால் மனைவியானவள் அலங்காரங்கள், வஸ்திரம், ஆபரணம், புஷ்பங்கள் முதலியவைகளைத் தரிப்பது கூடாது. ஆனால் ஏகாந்தத்தில் கணவனோடு இருக்கும்பொழுது ஆபரணங்கள் ஆடை முதலியவைகள் இருத்தல் வேண்டும். அலங்காரம் ஸ்திரீகள் பண்ணிக்கொள்வது கணவனுக்குக் களிப்பை உண்டாக்குவதே ஒழிய, ஊரார் பார்ப்பதற்காகவும், தன் பெருமைக்காகவும் அல்லவே அல்ல. மறுபடி பார்த்தால் கணவன் அநேக கெடுதி செய்தால், பார்யா ஸமர்த்தையா

யிருந்தாலும் புத்திமதி சொல்லக் கூடாதா? ஏகாந்த்மா யிருக்கும்பொழுது நிரம்பவும் வணக்கத்தோடு சொல்லி சீர்திருத்தம் செய்யலாம்.

மறுபடியும் தன் சொந்தத் தோழிகளோடு கூடி ஸல்லாபம் செய்வது, புசிப்பது, கோயிலுக்குப் போவது எல்லாம் கணவன் உத்திரவுமேல் செய்யவேண்டும். தர்மபத்னியானவள் வேறு வீடுகளுக்கும், கூட்டங்கள், மீட்டிங்குகள் முதலியவைகளுக்கும் போகக்கூடாது. ஆகையால் மனைவி பர்த்தாவிற்குப் பிரியமானதாயும் மங்களமூனதுமான காரியங்களைச் செய்யவேண்டும். இப்படி மகா பதிவிரதையான ஸ்திரீயைப் பர்த்தா அவமதித்து அலக்ஷியம் செய்தால் அப்பொழுது என்ன செய்வது? பதிப்பிராணையாக விருக்கும்பக்ஷத்தில் அவனை யிருந்திட்டோ வேறு காரியங்களாலேயோ குல ஹீனர்களைப்போல் கெடுக்காமல் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் குணங்களை அனுசரிப்பதுதான் தர்மம் என்று வேதம் சொல்லுகிறது. இதற்கு உதாரணமாய் சீதை, திரௌபதை, சகுந்தலை முதலானவர்களைக் கூறலாம். இவர்கள் சரித்திரங்களை வாசித்தால் பதிவ்ரதா தர்மம் நன்றாய் நாம் அறிந்து கொள்ளலாம் என்பது திண்ணமே.

ஆரியமத ஸ்திரீகளின் தர்மங்களை நிரம்பவும் குறைச்சலாய்ச் சொல்லிவிட்டு நாம் நம் ஸ்திரீகளின் தற்கால நிலைமையைப்பற்றி சற்று இவ்விடம் விசாரிப்போம். மேல் நாட்டார்களுடைய படிப்பும் அவர்கள் ஒழுக்கங்கள் பழக்கங்கள் வழக்கங்கள் உடைகள் முதலியவைகளும் நம் ஸ்திரீகளுக்கு ஒருவிதமான மாறுபாடுகளைச் செய்துவிட்டன. எப்படி நாம் நமக்குத் தர்மத்தைவிடப் பணம்பெரிது என்று நம் தர்மங்களையும் ஆசாரங்களையும் கொள்கைகளையும் விட்டுவிட்டு மேற்கு நாட்டார்கள் உடைகள் பழக்கங்களை

அனுசரிக்கிறோமோ, அப்படியே நம் ஸ்திரீகளும் அவர்அவர்கள் தர்மங்களை விட்டு நழுவிவருகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

ஆரியர்களான நமக்குப் பணம், சொத்து, ஆபரணங்கள் அணி முதலியவைகள் எல்லாம் தர்மமே. "தர்மம் தலைகாக்கும்" என்று நம் பெரியோர்கள் சொல்லி நாம் கேட்கவில்லையா? பகவான் பகவத் கீதையில்

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

என்று சொல்லியிருப்பதை வாசிக்காதவர்கள் எவர்கள் இருக்கிறார்கள்! பிறர் தர்மங்களை அனுஷ்டிப்பதைக் காட்டிலும் நம் தர்மங்களைத்தான் மரண அவஸ்தையைக் கொடுத்தாலும் அனுஷ்டானம் செய்யவேண்டும். ஆகையால் மேற்குத் திசையார்கள் தர்மங்களை நாம் அனுஷ்டித்தல் கூடவேகூடாது. அப்படிச் செய்வதால் நம் தேசத்திற்கு க்ஷேமக் குறைவும், சுகத்தின் நாசமும்தான் பலனாக முடியும்*

நம் ஸ்திரீகள் இருக்கும் நிலைமையை நன்றாய் கவனிக்க ஓர், இந்த மதஸ்தன் வீட்டிற்குப்போய் ஆலோசிப்போம். முதலில் சில வயது சென்ற ஸ்திரீகளை காண்கிறோம், அவர்கள் நாங்கள் மடி, நீங்கள் எட்டி போங்கள் என்று சொல்லிக்கொண்டே தூர தனியாக இருப்பதும் பேரன் பேத்திகளை அடிக்கடி விழுப்பு தீண்டல் என்று குற்றம் சாற்றுவதும் தாங்களே அடுப்பு அறைகளை விட்டு அசையாமல் சமையல் முதலிய வேலைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். பிறகு கிருகஸ்தன் மனைவியைப்

---

*இந்த அபிப்பிராயத்தை ஸ்ரீமான் Pramatha Nath Bose "Illusions of New India" என்ற புஸ்தகத்தில் நன்கு விளக்கியிருக்கின்றனர்.

பார்க்கிறோம். அவள் காலைவேளை ஆகாரத்திற்குக் காப்பி கொட்டைகளை வறுத்து அறைப்பதில் ரொம்பவும் சுறு சுறுப்பாயிருக்கிறாள். மாமியார் தவிர பாக்கி எல்லாருக் கும் காப்பி டிக்காக்ஷன் அன்னம்போல் முக்கிய ஆகார மாக வழங்கி வருகிறது. தேகத்திற்குக் கெடுதல் உண் டாக்கும் என்று வைத்தியன் சொன்னாலும் அதைக் குடிக்காத ஜாதிகளே கிடையா. மாமியாரோ ரொம்பவும் வைதிகமாய் இக்காலத்தை அனுசரியாமல் பஞ்சாங்கத்தை எடுத்து ஏகாதசி முதலிய விரதங்களைப் பார்ப்பதும் சாதுர் மாஸ்யம் முதலானவைகளை அனுஷ்டிப்பதும், ராமா யணம், பாகவதம் வாசிக்கிற இடங்களுக்குப்போய் கதை கள் கேட்பதும், அடிக்கடி ஆசாரியர்களுக்குத் தக்ஷிணை கொடுப்பதுமாயிருக்கிறாள்.

கிருக பத்னிக்கு இவைகளையெல்லாம் கவனிக்கிற தற்கு நேரமில்லை. ஸீதை, சாவித்திரி, லக்ஷ்மி முதலிய வர்கள் சரித்திரங்களை வாசிப்பதற்கும் அவகாசமில்லை. புராணங்கள் கதைகள் கேட்கப் போவதற்கும் நேரமில்லை. வர்ணாச்ரம தர்மங்களை அறிந்துகொள்வதற்கும் அவகாச மில்லாதவளாய், பதி ஸேவையைச் சிலாகித்தாலும், பர்த்தாவிற்கு அடிமையாக இருப்பதை (absolute obedience) சம்மதிக்காதவளாய், அடிக்கடி தலைகாணி மந்திரோ பதேசங்களில் மூழ்கினவளாயிருக்கிறாள்.

மேற்படியும் நாட்டுப்பெண் எப்படியிருக்கிறாள் என்று பார்க்க ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. அவள் அநேக தோழிகளோடு கூடிப் பள்ளிக்கூடம் போய் வாசித்து வரு கிறாள். படிப்பு முடிந்தபிறகு வீட்டிற்கு எஜமானியாக விளங்குகிறாள். மஞ்சள் பூசுவது நிரம்பவும் நாகரீகமில் லாதவர்கள் செய்கிற வழக்கம் என்று ஸாண்டில் உட்டு (Sandal wood), விநோலியா முதலிய ஸோப்புகளை உப

யோகப்படுத்தி வருகிறாள். இவளுக்கு இன்று என்ன வாரம் திதி, என்று ஏகாதசி, அமாவாசை முதலிய விரத தினங்கள் என்று கொஞ்சமேனும் தெரியாது! விசேஷ தினங்கள் வந்தால் முதல் நாள் புரோகிதர் வந்து தெரிவிப்பதே வழக்கமாம். அவர்களுக்கு ஏதாவது இங்கிலீஷ் நாவல்கள் கட்டுக் கதைகள் வாசிக்க நிரம்பவும் பிரியமே ஒழியத் தர்மத்தில் சிரத்தை கிடையாது. அமெரிக்கா முதலிய தேசங்களின் சரித்திரங்களை வாசித்து அவிடங்களில் ஸ்திரீகள் எப்படி ஸ்வதந்திரம் அநுபவிக்கிறார்களோ எப்படி வெளிக்கூட்டங்கள் சங்கங்களுக்குப் போகிறார்களோ அப்படிப் போவதில் திருப்தியுள்ளவளாயிருக்கிறார்கள். புருஷனுக்குச் சந்தோஷமுண்டாகும்படி நடக்காமல், அவனைப் பணமிருந்தால் கவனிப்பதும், பணமில்லாமலாவது வேறு நல்ல உத்தியோகங்களில் இல்லாமலாவது, உயர்ந்த படிப்புகளான பி. ஏ. எம். ஏ. க்கள் வாசிக்காமலாவது யிருந்தால் சொந்தப் புருஷர்களைக்கூட இலக்ஷியம் செய்து அவனுடைய சௌகரியத்தையும் சுகத்தையும் எதிர் பார்க்காமல் தன் இஷ்டம்போல் நடக்கத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பதைப் பார்க்க வாஸ்தவமாயிருக்கிற தர்மிஷ்டன் கண்ணால் ஜலம் விடும்படி காலம் ஏற்பட்டுவிட்டது. இப்படி நம் ஸ்திரீகள் நடப்பதற்குக் காரணம் அவர்களை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி இங்கிலீஷ் பாஷை கற்பித்து கொடுப்பதேதான்.

ஆரிய ஸ்திரீகளின் விசேஷ கௌரவத்தையும் பதிவிரதா தர்மத்தையும் கொண்டாடுகிற ஐரோப்பியர்கள் அநேகர். ஸர் ஜார்ஜ் பேர்ட்உட் (Sir George Birdwood), இந்து ஸ்திரீகளைப்பற்றி பின்வருமாறு சொல்லுகின்றனர். "நிரம்பவும் பதிவிரதா சிரோமணிகள். வீட்டை விட்டு வேறு வீடுகூடப்போகாமல், தங்கள் தர்மங்களை விட்டு, நழு

வராமல் நிரம்பவும் வணக்கம், பொறுமை, தயை முதலிய குணங்களோடு கூடியவர்கள். குடும்ப காரியங்களில் ஸாமர்த்தியமுள்ளவர்கள். பர்த்தாவைத் தெய்வமாக எண்ணிப் பயந்து நடக்கிறவர்கள் "இதே மாதிரியாக அநேக மேனாட்டார்கள் அபிப்பிராய முள்ளவர்களா யிருக்கிறார்கள். அப்படியிருக்க நாம் இங்கிலீஷ்ப் படிப்பால் நம்மக தர்மங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்விட ஸ்திரீகளும் அவர்கள் தர்மங்களிலிருந்து நழுவிவிட்டால் புண்ணிய பூமி என்று இன்றுவரையில் வழங்கிவரும் நம் நாடு பாபம் அதினால் துக்கம், துக்கத்தால் தேக உபாதி அதினால் சோகம், கடைசியாக மரணம் முதலியதை அடைந்து இவ்வுலகில் ஒரு விதமான இன்பத்திற்கும் பாத்திரமில்லாதவர்களாயும், தெய்வபக்தி இல்லாதவர்களாயும் மாம்மன் (Mammon) என்னும் தெய்வத்தைத் தொழுகிறவர்களாயும் கொஞ்ச காலத்தில் ஆய்விடுவோம் என்பதில் சந்தேகமில்லை.

ஆரிய சிரோமணிகளே! சற்றுக் கவனியுங்கள். பழைய வழக்கங்கள், வர்ணாச்ரம தர்மங்கள் மதாசாரங்கள், கொள்கைகள் இவைகளெல்லாம், இப்பொழுது நம் தேசத்திலிருந்தால் அது ஸ்திரீகளாலேதான். நம்முடைய பெரியோர்கள், ருஷிகள் நமக்கு அளித்திருக்கும் அமிர்தத்தைவிட்டுப் பளபளப்பைக் கண்டு தங்க மென்று மயங்காமலும், கானலைக்கண்டு ஜலமென்று நினைக்காமலுமிருங்கள். நம் குழந்தைகளை வீட்டில் தகப்பனார் தான் சொல்லிக் கொடுக்கவேண்டும். புருஷன் வீடுபோன பிறகு பர்த்தா கவனிக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு இங்கிலீஷ்ப் படிப்பு வேண்டவே வேண்டாம். அவர்கள் சட்டங்களிலும் கோர்ட்டுகளிலும் வந்து நிற்க மனிதர்களான நாம் சமயல் தொழில் செய்யும்படி வைத்துக்கொள்ளாதேயுங்கள். குதிரை லாயத்தை திறந்துபோட்டுக் குதிரை

திருட்டுப்போன பிறகு வருத்தப்படுவதில் ஒரு விதமான பிரயோஜனமில்லை. திருட்டுப் போவதற்கு முன்னேயே வியத்தை பூட்டி விடவேண்டும். ஆகையால் நன்றாய்க் கண்ணை விழித்துப் பாருங்கள். அவர்கள் அடிமைகள் அல்லவே அல்ல. அவர்கள் கிருக பத்னிகள், தர்மபத்னிகள், ஸஹதர்மணிக்கள். அவர்களை வீட்டை விட்டு வெளியில் இப்பொழுதி கூட்டிப்போய்விட்டுப் பின்னால் வருத்தப்படாதேயுங்கள். எந்த துக்கம் வந்தாலும் தர்மத்தை கைவிடாதேயுங்கள். சிலசிலர் தாங்கள் சீர்திருத்தம் செய்கிறவர்கள் என்று சொல்லிக்கொண்டு பேப்பர்களிலும், ஜர்னல்களிலும், மீட்டிங்குகளிலும் சொல்வதையும் எழுதுவதையும் கண்டு மோசம்போகாதேயுங்கள். வேதங்கள் புராணங்கள் பிரமாணமில்லையென்று சொல்லுகிறவர்கள் வார்த்தை எப்படி பிரமாணமாயிருக்கும். ஆகையால் உங்கள் பெண்களைக் காப்பாற்றுங்கள். தர்மங்களை ஸீதாதேவி முதலிய பதிவிரதா சிரோமணிகளின் சரித்திரங்களை உபதேசித்து இந்தியா முழுவதும் ஒரே ஸீதையாயும் திரௌபதையாயும் ஸாவித்திரியாயும் செய்யுங்கள், நம்முடைய பாரதமாதா புண்ணியபூமி என்னும் நாமாவை எப்பொழுதும் வஹிக்கும்படியாக பண்ணுங்கள்.

V. R. ராமச்சந்திர தீக்ஷிதர்.

இந்துமதாசாரக்கொள்கை.

(முன்தொடர்ச்சி)

ஒவ்வொரு விஷயத்திலும் கேவலம் குணமேயிராது அல்லது கேவலம் தோஷமேயிராது ஒவ்வொன்றும குணதோஷங்கள் கலந்ததாகவேயிருக்கும். ஆகையநல் இன்னது

தான் குணமுள்ளதென்றும் இன்னதுதான் தோஷமுள்ளதென்றும் யாவராலும் சொல்லமுடியாது. ஆயினும், ருது காலத்திற்கு முந்தி விவாகம் செய்யப்பட்ட பெண் பர்த்துரு வியோகமடைந்த காலத்து இந்திரிய சுகம் கொஞ்சமேனும் அற்றவளாய் விபசார தோஷத்திற்குள்ளாவாளென்று சொல்லுகிற காலத்தில் ருதுவாய் விவாகமாகாதிருந்தால் யௌவனதசையின் சுபாவிகமான காம தீர்க்குணத்தினால் பிடிக்கப்பட்டு தர்மாதர்மத்தையறியாதவளாய் இஷ்டாபூர்த்தியொன்றையே கவனித்தவளாய் குலம் யோக்கியதையொன்றும் பாராமல் கேவலம் ரூபத்தை மாத்திரம் மோகித்து துர்மார்க்கத்தில் விழுந்து. இம்மையில் பலவாறான துர்வியாதிகளால் பிடிக்கப்பட்டு மறுமையில் நற்கதியுமிழந்தவளாயாவாளென்பதை ஏன் சற்று கவனிக்கவில்லை ?

தவிரவும் ஒரு விஷயத்தில் பிரவர்த்தித்து அதின் ரஸத்தை யறிந்தவர்களுக்குத்தான் இன்னும் ஜாஸ்தியாய் அந்த விஷயத்தில் புத்தி பிரவிர்த்திக்குமேயல்லாது அது விஷயத்தில் ரஸத்தையே வறியார்களுக்கு அவ்வளவு புத்தி பிரவிர்த்திக்காது. அதுபோலவே, ருதுவிற்கு முந்தியே பர்த்துரு வியோகமடைந்து பர்த்துரு சுகமறியாத பெண்களே கெட்டுப்போவார்களென்று பயப்படும்பொழுது ருதுவிற்குப் பிறகு அரைகுறையாய்ச் சுகமடைந்து புருஷனிறந்த ஸ்திரீகள் ஜாஸ்தி விபசார தோஷத்திற்குள்ளாவார்களென்பதற்கு கொஞ்சமேனும் ஐயமில்லை.

ருதுவானதற்கு முந்திப் பர்த்துருவியோகமடைந்த ஸ்திரீகளைவிட ருதுவாய்ப் பதியிழக்கும் ஸ்திரீகளுடைய விபசார தோஷம் கம்மியாயிராதுவென்று சொல்லக்கூடும். இவ்வாறு சிலருக்கு ஒரு நியாயம் சரியாயிருந்தால் இன்னும் சிலருக்கு இன்னொரு நியாயம் சரியாய்த் தோன்றும்.

இவ்வாறு யுக்தி நியாயமானது அவரவர்களுடைய யுக்தி புத்திக்குத் தக்கபடி இடம் கொடுக்கும். ஆகையால் இவ் விதமான யுக்தி வாதங்களை நினையாமல், ஒரு ஸ்திரீக்கு ருதுவாயிருக்கிற காலம் மிக்க அபாயமான காலமென்று அந்தக் காலத்தில்தான் எப்பேர்ப்பட்ட விவேகிகளும் கல் நெஞ்சம் உள்ளவர்களும் காமவிகாரத்திற்குட்பட்டு மனம் கரைந்து நிற்பார்களென்று அப்பேர்ப்பட்ட காலத்தில் கெடுதலாய் மனம் பிரவர்த்தித்து அழியாமலிருக்கும்பொருட்டு தந்தையானவன் முன்னடியே தக்க வரனைத் தேடி விவாகம் செய்துவைக்க வேண்டுமென்றும் சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. பின்னும் இக்கலியுகத்தில் யாருக்கும் மனதைக் கட்டுவது அசாத்தியமானபடியாலும் முக்கியமாய் ஸ்திரீகளுடைய கற்பு அதிகமாய்க் கெட்டுப்போகக் கூடியதாலும் தவிரவும் யௌவனதசைக்கு அடையாளமான ருதுகாலமானது வெகு பால்யதசையிலேயே வந்துவிடுகிறபடியாலும் இக்கலியுகத்துப் பிரஜைகளை ரக்ஷிக்கக் கருதி ஸ்திரீகளுக்கு விவாககால நிர்ணயம் அதிக இளம் பிராயத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றதே தவிர வேறில்லை.

3. ஸ்திரீகளை நாகரீகமில்லாமல் அடிமையாய் நடத்தல்.

நமது தேசத்து ஸ்திரீகளுக்கு நாம் ஸ்வதந்திரம் கொடுக்கிறதில்லையென்றும், அடிமைத் தன்மையாய் நடத்துகிறோமென்றும், பலதடவைகளில் ஆங்கிலேய தேசத்தாரும் நமது தேசத்தில் இந்துமதாச்சாரக்கொள்கைகளின் சீர்திருத்தக் கூட்டத்தார் (Hindu Social Reformer) ஆலும் சொல்லக் கேட்டிருக்கிறோம். அது சரியாவென்று யோசித்துப் பார்ப்போம்.

முதலாவது, ஸ்வாதந்திரிய விஷயமாய்ப் பால்லிய விவாஹ சம்பந்தமான பாராவில் சொல்லியபடி ஸ்திரீகளுக்குக், காமக்குரோத லோபமோஹமத மாத்ஸரியாதி

கள் பிறவியாய்ப் பிரம்மாவினல் அவர்களைப் படைத்த காலத்தில் உண்டாக்கியிருப்பதினல் இவ்வாறு குணங்களும மேலெழும்பி அவர்களை யழுத்தாதவண்ணம் பால்வியத்தில் தாய்தந்தையர்கள் ஸ்வாதீனத்திலும், யெளவனத்தில் பர்த்தாக்கள் சுவாதீனத்திலும் முதுமையில் புத்திரர்கள் ஸ்வாதீனத்திலும் இருக்கவேண்டியதாய் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பிரமாணம் மனுஸ்மிருதி 9-வது அத்தியாயம் 3, 15, 16 சுலோகங்களே. கிருதயுகத்தில் ரேணுகை என்கிற ஒரு ஸ்திரீயினலும் திரேதாயுகத்தில் சீதாதேவியாலேயும், துவாபரயுகத்தில் துரௌபதியினலும் கலியுகத்தில் வீட்டுக்கு வீடுள்ள ஸ்திரீகளினலும் கலகங்களும் அசமாதானங்களும் ஏற்பட்டிருப்பதால். ஒரு புராதன சுலோகத்தின்படிக்கும் இன்னும் அனேக வசனப் பிரமாணங்களின்படிக்கும் ஸ்திரீகள் சகஜமாய் மனச்சுத்தியில்லாதவர்கள். அப்படி மனச்சுத்தி யுண்டுபண்ணி நெறி தவருமல் சன்மார்க்கத்தில் உட்காரவைத்து இல்லறம் நடத்துவிக்க விவேகத் திறமையுள்ள ஆண்ஜாதி மிகவும் அத்தியாவசியம்.

இரண்டாவது அப்படிக்குச் சுவாதீனமில்லாமல் ஒரு ஆளுக்கு உட்பட்டிருக்கிருர்கள் என்று சொல்லுவதால் ஐரோப்பிய நாடுகளில் முன் காலங்களில் அதாவது அடிமை வியாபாரம் (Slavery Trade) நடந்து கொண்டிருக்கிற காலத்தில் அடிமைகளை நடத்தினதுபோலும் இப்போதும் சிற்சில விடங்களில் நடத்தப்படுகிற அடிமை வகுப்பார் போலவும் நடத்துவதாக எண்ணக்கூடாது. உபாத்தியாயருக்குட் பட்ட மாணக்களைப்போலவும் குருவிற்குட் பட்ட சிஷனைப் போலவும் ஸ்திரீகளுடைய நடவடிக்கைகளுக்கு மாத்திரம் உத்திரவாதிகளாய் இருந்துகொண்டிருக்கிருர்களே தவிர அவர்கள் ஆடையாபரணங்கள் தரித்

துக்கொள்ளும் விஷயத்திலும் அவர்கள் ஆகார விஷயத்திலும் தன் பிறந்த குலத்துச் சுற்றத்தாரை உபசரித்து ஆதரிக்கும் விஷயத்திலும் புருஷர்களினுடைய நிர்ப்பந்தமன்றியிலேயே விலக்குகளான சில கேசுகளைத் தவிர பெரும்பாலும் சுவேச்சையாகவே நடந்துவருகிறாள். ஐரோப்பிய நாட்டிலும் இந்துக்களிலும் தாழ்ந்த எளிய ஜாதிகளிலுள்ள ஸ்திரீகளை அவர்களின் ஆண்பிள்ளைகள் நடத்துவதைக் காட்டிலும் இந்துக்களில் படித்தவர்களும் ஐவேஜியுள்ளவர்களுமாகிய ஜனங்கள் தாங்கள் ஸ்திரீகளை அதிக மேன்மையாயும் நாசரீகமாகவே நடத்துகிறார்கள். அப்படிக்கு நாசரீகமாயும் மேன்மையாயும் நடத்துவதற்குத் திருஷ்டாந்தம் மிகவே. புருஷர்கள் வயதுசென்ற தகப்பனும் தாயும் மக்களும் பிள்ளைகளும் பெண்ஜாதியும் பேரன்களுமுள்ள ஒரு பெரிய ஏழைக் குடும்பத்திற்காகத் தாங்கள் வெளியில் போய் எவ்வித வேலையிலாவது ஒரு வேலையில் அமர்ந்து கடுமையான வெயிலில் நெற்றியில் வியர்வை ஒழுக உயிர்போக உழைத்து சம்பாதித்துக்கொண்டுபோடுகையில் அப்படிச் சம்பாதித்துக் கொண்டுவந்த பொருளைக் காப்பாற்றுவதும் வீட்டுக்கு வரும்படியான அதிதிகள், பிரம்மசாரிகள் வானப்பிரஸ்தர்கள் சன்னியாசிகள் இவர்களை பாதப்பிரக்ஷாளன அர்க்கிய பாத்ய ஆசமனீயாதிகளால் உப்சரித்து வேண்டிய ஆகாராதிகளைக் கொடுப்பதும் தேவருஷி, பிதிரு, நிரு, பூதயஞங்களுக்கு அனுகுணமாயிருந்து உதவிபுரிதலும் இன்னும் இல்லறச் சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளும் வெளியில் போய் அலைந்து திரியாமல் வீட்டிற்குள்ளிருந்தபடியே நடத்துவதானவும் சுலபமானவும் வெகு பெருமையானவுமான வேலைகளைச் செய்கிறார்களே தவிர இந்துமதத்தில் எளிய ஜாதி ஸ்திரீகளும் ஐரோப்பிய நாட்டு ஸ்திரீகளைப்போல அவர்

கள் இருந்துவருகிற குடும்பத்திற்காக ஆண் ஜாதியாரைப் போலவே தாங்களும் வெளியில் கடுமையான வெய்யிலில் போய் வியர்வையுண்டாக உழைத்து அவரவர்கள் அவர்களே வயிற்றுக்குச் சம்பாதித்துக்கொண்டு வருவதென்பதை எக்காலத்திலும் அறியோம். நாடோறும் தாழ்ந்த ஜாதி ஏழைக் குடும்பங்களில், கூலிக்கு நெல்லு குத்துவதும், களை வெட்டப்போவதும், விறகுகட்டுச் சுமந்துகொண்டு காதவழி விற்கப்போவதும் பசு எருமை மாடுகளுடன் பாடுபட்டுப் பால் தயிர் நெய்களை ஊருக்கு ஊர் விற்கக் கொண்டுபோவதும், அங்காடிக் கூடைகள் தலையில் தெருக்கள்தோறும் சுமந்து கொண்டுபோய் விற்பதும் இன்னும் நானாவிதமான வயிற்றுக்காக வேலை செய்யும் ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறோம். அவர்களாவது வறுமையினாலுண்டாகிய வயற்றுக் கொடுமையால் அவ்வாறு தீராமல் செய்யவேண்டியதாயிருக்கிறதேயொழிய அவர்களுடைய ஆண்பிள்ளைகள் வேணுமென்று, அநாகரீகமாய் நடத்த உத்தேசித்துச் சொல்வதல்ல.

ஆனால் ஐரோப்பிய முதலான நாட்டு ஸ்திரீகளோ அவர்கள் புருஷர்களும் உயர்ந்த பதவிகளிலிருக்க அவர்களும் படிப்பு இலாகாவிலும், தபால் இலாகாவிலும், வைத்திய இலாகாவிலுமுள்ள உத்தியோகங்களில் அமர்ந்து கஷ்டப்படுவதைப் பார்த்திருக்கிறோம். நம்முடைய ஸ்திரீகளோ அப்படிக்கில்லாமல் விவேகியான ஸ்திரீகள் இல்லறத்தை நடத்துவதில் விவேகத்தை நாட்டுவதோடு பதியோடு வாழும் ஸ்திரீகளாயிருந்தால் பதிசுசுரூஷை ஈசுவர பக்தி வீட்டிற்குள் பெண்கள் கூட்டத்திலேயே கிரந்த காலக்ஷேபம் இவைகளிலும், பதியில்லாதவர்களாயிருந்தால் அனேகம்பேர் தங்கள் விவேகங்களைத் தம் புத்திரர்களின் இல்லறத்தை நடத்திக்கொண்டே சில புருஷர்

களைப்போலவே ஞானமார்க்கத்தில் செலுத்தி ஈசுவரத் தியானம் முதலியவைகளால் பரலோக சாதனங்களையடைவார்களே யல்லாது வயிற்றை நிரப்புவதற்கான உத்தியோகங்களில் அமரும்படி ஆண்பிள்ளைகளால் பழக்கப்படுவதில்லை.

यत्र नार्यः सुपूज्यन्ते रमन्ते तत्र देवताः ।

என்று பூர்வார்த்தக்கோடு மனுஸ்மிருதியில் ஆரம்பித்திருக்கிறபடி எந்த வீட்டில் பூஷணாதிகளால் மாதர்கள் பூஜிக்கப்படுகிறார்களோ அங்குச் சமஸ்த தேவர்களும் வாசம் செய்கிறார்கள். எங்கு அவ்வாறு ஆசரிக்கப்படவில்லையோ அந்த வீட்டில் நடக்கும் எல்லா கர்மங்களும் பலனற்றவைகளாய்ப் போகின்றனவென்றும், தந்தை உடன்பிறந்தாரைப்போல் கணவனும் ஒரு ஸ்திரீயைக் கல்யாண காலத்திலும் பின்னடியும் பூஷணாதிகளால் உபசரித்து சந்தோஷப்படுத்தவேண்டியதென்றும், கணவனுடைய அன்பு முதலியவற்றால் பரபுருஷனை நினையாமலிருக்க வேண்டுமென்றும் கணவனுடன் சேர்ந்து பிரஜாவிருத்தி செய்வது மிக்க அத்தியாவசியமென்றும், மாதர்கள் தாங்களைத் தாமே காக்கும்படி செய்யவேண்டுமென்றும் அதுவே அவர்களுக்கு நல்ல காப்பாகுமென்றும், நல்ல காவலாளரை வைத்து வெளியில் போகவொட்டாமல் வீட்டிலேயே மறியல் போடுவதினால் சரியாய்க் காக்கப்படமாட்டார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கும் மேலான ஜாதிகளிலும் கீழ்ச் சாதிகளிலும் ஐவேஜியும் விவேகமுள்ளவர்களாயும் இருப்பவர்கள் அவ்வாறு நெறி தவறிப்போகாமல் தங்களுடைய விவேகமான கடிவாளத்தால் ஸ்திரீகளை இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறார்களே தவிர சில அறிவீனர்களான ஸ்திரீ புருஷர்களைத் தவிர மற்ற யாரும் அன்னிய ஜாதியாராலும் இந்தப் பத்தொன்பதாவது இருபதாவது நூற்றாண்டின் சில இந்து விவேகிகளாலும் சொல்லப்படுகிற்

படி அநாகரீகமாய் நடத்துவது கிடையாது. ஸ்திரீகளை இந்தக் காலத்தில் சிலர் மூடத்தனத்தால் பாவிப்பதுபோல் இழிவாய் பாவியாமல் மிக்க அன்புபாராட்டவேணுமென்று போதிப்பதற்கடையாளமான சாக்ஷாத் பரமசிவனென்பவர் தன்னுடைய சம்சாரமாகிய அம்பிகையைத் தம் பாதி உடலோடு உட்லாய் வைத்துக்கொண்டு "அர்த்த நாரீசுவரர்" என்னும் பெயரோடு விளங்கினார்; சாக்ஷாத் மஹாவிஷ்ணுவானவர் தம் இல்லாளாகிய மகாலட்சுமியை சதா ஹிருதயத்திலேயே வைத்துக்கொண்டிருக்கிறார். அநேக இதிகாச புராணங்களும் யாக்ஞவல்கியர், கார்கி, மைத்திரேயி ஆகிய இரு பத்தினிகளையும் வேதாந்த தத்துவோபதேசங்களாலும் அதே மாதிரி அகஸ்திய மஹாருஷி லோபாமுத்திரை அநேக தத்துவோபதேசங்களினாலும் இன்னும் வசிஷ்ட பிரபிருகி ருஷிகளும் அரிச்சந்திரன், ஜனகர், ஸ்ரீராமர், தர்மராஜர் முதலானவர்களும் தங்கள் பட்சமாய் நடத்தும் தன்மையால் மிக்க பிரசித்திபெற்றவர்கள். இக்காலத்தில் சில ஸ்திரீகளும் புருஷர்களும் அறியாமையினால் தம்மைச் சார்ந்த ஸ்திரீகளை இம்சைப் படுத்துவதினால் நம்முடைய சுருதிஸ்மிருதி புராண இதிகாசங்களே அவ்வாறு நடத்த ஆக்ஞாபிக்கிறதென்றும் பெரும்பாலும் ஆரியர்கள் முன்னோர்கள் நாள் முதற்கொண்டு அவ்வாறு ஹிம்சை பண்ணுவதான அனுஷ்டானமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்றும் சொல்வது கொஞ்சமேனும் நியாய சம்மதமாயிராது.

மூன்றாவது நம்முடைய ஸ்திரீகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்காமல் அஞ்ஞான சாகரத்தில் முழுக அடிப்பதாக பெருங்குற்றம் நமதுபேரில் சூட்டப்பட்டிருக்கிறது. அது மிகவும் உண்மையே. ஆனால் ஸ்திரீகளுக்கேற்பட்ட கடமைகளுக்கேற்றபடி அக்கடமைகளைச் செய்வையாய்ச்

செலுத்தித் தங்கள் வாழ் நாட்களைத் தங்கள் பர்த்தாவுக்கும் மாமனார், மாமியார், மைத்துனர், நாத்தினாள் முதலிய பர்த்தாவைச் சார்ந்தவர்களுக்கு உபயோகப்படுத்தும்பொருட்டும், குடும்பத் தலைமை வகிக்கும் காலத்தில் தான பெற்ற பெண்பிள்ளைகள் நாட்டுப் பெண், இவர்களைக் கெடுதல்களிற் போகாமல் நல்வழியிற் செலுத்துவதுமல்லாமல் அவர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களைப் புகழ்பெறும்படி எவ்வாறு நடத்தவேண்டி பழகிக்க வேணுமோ அவ்வாறு பழக்கியும் தங்கள் ஆயுளுக்குப் பிறகு நற்கதியடையத் தக்க திறமையுள்ளவர்களாயிருக்க எவ்விதமான படிப்பு ஸ்திரீகளுக்கு அத்தியாவசியம் என்றால் அது இந்நூற்றாண்டில் பெரும்பாலர் எண்ணுகிறபடி இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து புருஷர்களுக்காக யேற்பட்ட நூல்களைக் கற்று யூனிவர்சிட்டி பரீக்ஷைகளும் கவர்ன்மெண்டு பரீக்ஷைகளும் கொடுப்பதல்ல. 4, 5 வகுப்புகள் வரைக்கும் வாசித்து படிப்பில் தேர்ச்சியடைந்ததுபோல் கர்வம் கொள்வதும் அல்ல. ஆனால் புருஷர்களைப்போலவே ஸ்திரீகள் வாழ் நாட்களுக்கு முக்கியாதாரமான தேகப் பயிற்சியோடுகூட மனப்பயிற்சியும், நல்லொழுக்கப் பயிற்சியும் மதசம்பந்தமான பயிற்சியும் குடும்ப காரியத்திற்குரிய பயிற்சியுமே. ஏற்கனவே பல விடங்களிற் சொல்லப்பட்டிருக்கிறபடி புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு மனச்சக்தி குறைவாயும் அதுகாரணத்தைக் கொண்டே காமக்குரோதாதி ஷட்குணங்கள் மேலிட்டுமிருப்பதால் அவ்விதப் பயிற்சிகள், மனச்சுத்தியுள்ளவும், நல்லொழுக்கமுள்ளவும், தெய்வபக்தி முதலான ஆஸ்திக்ய புத்தியுள்ளவும் குடும்ப காரியங்களை நிர்வகிக்கத் திறமையுள்ளவர்களுமான குடும்பங்களிலிருந்து அப்பேர்ப்பட்ட திறமைகளோடு கூடிய அனுபவசாலிகளால் நாடோறும் அனு

ஷ்டிக்கப்படுகிற அனுஷ்டானங்களைக் கவனித்து அவ்வித அனுஷ்டானங்களைச் சிக்ஷைக்குட்பட்ட சிறு பெண்கள் தாங்களும் செய்துவருவதினாலுண்டான அனுபவ ஞானத்தினாலேயொழிய கேவலம் புஸ்தகப் படிப்பினால் உண்டாவதல்ல.

'यस्य नास्ति स्वयं प्रज्ञा शास्त्रं तस्य करोति किम् ।'

எவனுக்கு இயற்கையாக ஞானம் கிடையாதோ அவனுக்கு நூல்களினால் பிரயோஜனமில்லை என்று நம்முடைய ஆர்ய விவேகிகளும்

"The modest virgin, the prudent wife or the careful matron, are much more serviceable in life, than petticoated philosophers, blustering heroines or virago queens."—Goldsmith.

அதாவது ஸ்திரீகள் நேர்த்தியான உடுப்புகள் தரித்த தத்துவ சாஸ்திரங்களை யுணர்ந்தோர்களாயும், பெருமை பாராட்டுகிற சூரர்களாயும் அல்லது சுபாவத்தோடு கூடிய மஹாராணிகளா யிருத்தலைவிடப் பால்யத்தில் அடக்க வணக்கத்தோடும், யௌவனத்தில் சுறுசுறுப்பும் முன் புத்தி யுள்ள மனைவியாயும் அதாவது பதியினுடைய யோகக்ஷேம விஷயத்தைக் கவனிப்பதில் மந்தமாயும் பதியினுடைய வேண்டுகோளை கவனிப்பதற்காக செய்யப்போகிற காரியங்களில் இன்னது நன்மை இன்னது தீமையென்று ஆராய்ந்தறிவதில் முன்யோசனை இல்லாதவளா யிராமலும் பின்னும் தாயார்களாகிறகாலத்தில் தங்கள் குழந்தைகளுடைய இம்மை மறுமை சுகங்களுக்கு யாதொரு இடையூறும் வராமல் பாதுகாக்கப் பயின்றவர்களுமான ஸ்திரீகள் தான் அவர்களுடைய வாழ்வு நாட்களில் உபயோககரமா யிருப்பார்களென்று ஆங்கிலேய கவிராயராகிய கோல்டுஸ்மித்தும் (Goldsmith) சொல்லியிருக்கிறார்கள்.

சுப்பிரமணியய்யர்.

மாயாசாஸ்திரம்.

(முன்தொடர்ச்சி.)

பிர்மத்தின் லக்ஷணம் அறியவேண்டியது அவசியம் மனதின் அசுத்தத்தைப் போக்கடித்து மனதை ஸ்திரப்படுத்திக் கொள்வது முக்கிய ஸாதனம். அதை அடைவதற்கு ஏற்பட்ட சில விதிகள் முன் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வித முக்கியமான கர்மங்களில் யாகம் ஒன்று. “நீங்கள் யாகம் செய்யுங்கள் பிரவிருத்தி மார்க்கத்தை அனுசரித்து விதிக்கப்பட்டிருக்கும் தக்ஷிணையைக் கொடுத்து யாகம்செய்பவர்கள் அடையும் பலன் உங்களுக்குக் கிடைக்கும். யாகம் செய்கிறவன் யாகம் செய்து இதரர்கள் அடையக்கூடிய பலனுக்கு பாகஸ்தனாகிறான். மனுஷியர்கள் செய்யும் யாகங்களின் பலனை நீங்களனுபவித்தால் பலம் உண்டாகி 3 உலகங்களை ரக்ஷிப்பீர்கள். இதை உத்தேசித்து வேதம் யாகம் தக்ஷிணை முதலியவைகளை நான் ஏற்படுத்தியிருக்கிறேன். இவைகளைக் கொண்டு மனுஷியர்கள் யாகம் செய்தால் நீங்கள் திருப்தியடைவீர்கள்” என்று தேவர்களுக்கு விஷ்ணு உபதேசம் செய்ததாக பாரதம் சாந்திபர்வம் 341 அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிர்மாவும் யாகம் செய்து யாகத்தின் பலத்தை அடைய பாத்தியஸ்தனானார். ஜகத்தை அநேக விதமாக சிருஷ்டிக்க இச்சித்தார். பிரவிருத்தி மார்க்கத்தை உண்டாக்கினார். யாகம் செய்வதற்கு விதிக்கப்பட்ட தக்ஷிணையையும் ஏற்படுத்தினார்.

தேவதைகளும் யாகம் செய்து யாகத்தின் பலனை அடைய பாத்தியஸ்தனுகிறார்கள். இவ்விஷயம் கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஜைகளையும் யாகத்தையும் சிருஷ்டித்து நீங்கள் யாகம் செய்யவேண்டும். அது நீங்கள் அபேக்ஷிக்கும் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும். நீங்கள் தேவதைகளை திருப்தி செய்துவைத்தால் அவர்கள் உங்களை திருப்தி செய்விப்பார்கள். ஒருவர்க்கொருவர் ஒத்தாசை ஏற்படுவதால் சுகமாக யிருப்பார்கள். யக்ஞத்தால் திருப்தி அடைந்த தேவர்கள் உங்களுக்கு வேண்டியதைக் கொடுப்பார்கள். மூன்று லோகங்களும் சுகமாக யிருக்க வேண்டியதற்கு மனுஷியர்கள் யாகம்செய்து அதனுல் தேவர்களுக்கு திருப்தி உண்டாக்கி அவர்கள் விருஷ்டிரூபமாக ஸஸ்யாதிகளை விருத்தி செய்கிறுர்கள்.

6. ஈசுவரன் பசுபதி பிர்மாதி ஜீவர்கள் பசுக்கள் பசுபதிக்கு பசுக்கள் தங்களை அர்ப்பணம் செய்யவேண்டும். பிர்மா தன் வலபயை எடுத்து ஹோமம் செய்ததாகவும் அதிலிருந்து பசு உண்டானதாகவும் அந்த பசுவின் வபையை ஹோமம் செய்ததாகவும் அவ்விதமாகவே எல்லாப் பிராணிகளும் பசுபதிக்கு தங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்றும் பசுவைக் கொடுத்துத் தங்களை விலக்கிகொள்ளுகிறுர்கள் என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் ஈசுவரனுல் விதிக்கப்பட்ட விதி. சக்கரவர்த்தி செய்யும் கட்டளையை மீரக்கூடாது. அதுபோல் பிரபுவால் சிருஷ்டிக்கப்பட்ட வேதத்தில் விதிக்கப்பட்டிருப்பதை மீரக்கூடாது. நாம் எல்லாரும் பிரபுவின் உத்திரவை நடத்துகிறோம். நமக்குப் பதிலாக பசுவை அர்ப்பணம் செய்வதினுல் பசுவிற்கு நல்ல கதி உண்டாகவேண்டுமென்று ஆசீர்வாதம் செய்து யஜமானனும் பத்னியும் அனுப்புகிறுர்கள்

अश्वमेधे श्रुतिश्चेयं अश्वसंज्ञपनं प्रति ।
लोकान्तरगतानित्याः प्राणा नित्यं शरीरिणाम् ॥
अहं हितं वदाम्येतत्प्रियं चेत्तव पार्थिव ।
देवयाना हि पन्थानः श्रुतास्ते यज्ञसंस्तरे ॥
आहूतो यत्र यज्ञस्ते तत्र देवा हितास्तव ।
यदासमन्विता देवाः पशूनां गमनेश्वराः ।
[illegible]तिमन्तश्च तेनेष्ट्वा नान्ये नित्याभवन्त्युत ॥

भार० अश्वमेधपर्व. ३४ अध्यायः.

“அசுவமேதயாகத்தில் அசுவத்தை வதை செய்யும் காலத்தில் அடியிற்கண்ட அர்த்தமுள்ள மந்திரம் உச்சரிக்கப்படுகிறது. ஸ்தூல தேஹஸம்பந்தமான பிராணன் இந்திரியங்கள் முதலியவைகள் மறு உலகத்திற்குப் போனாலும் நித்தியமாகவேயிருக்கும். உனக்கு விதத்தைச் சொல்லுகிறேன். நீ சொல்லும் மார்க்கங்களுக்கு தேவதைகள் அதிபதிகள் உன்னை பலியாகக் கொடுக்க எத்தனப்பட்டதை அறிந்து தேவதைகள் பிரீதி அடைந்தார்கள் சுகிருதி அடையக்கூடிய மார்க்கத்தை நீ அடைவாய். அங்கே தேவதைகள் உன்னை சுகமாகக் கொண்டுபோய் நல்ல உலகம் சேர்ப்பார்கள். தேகம் பார்வைக்கு நசித்ததாகத் தோற்றினும் பிராணன் இந்திரியங்கள் நசிக்கிறதில்லை” என்று மந்திரபலத்தால் யூபத்தில் கட்டியிருக்கும் பசுக்களின் இந்திரியங்கள் பிராணன் அவைகளின் உற்பத்திஸ்தானங்களான பஞ்சபூதங்களிலும் சேர்ந்துவிடுகின்றது. பசுக்களை யூபத்தில் கட்டி ஆலம்பனம் செய்வதும் ஸ்பர்ஸித்த பிற்கு விடுவதற்காக இருவகையாக ஏற்பட்டிருக்கிறது. பசு நல்லகதி அடைந்துவிடுகிறது என்று வேதத்திலும் பாரதம் அசுவமேதபர்வ. 34 அத்யாயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. யாகம் செய்யும் விதிகள் இவ்விதமாக ஏற்பட்டிருக்க ரஹஸ்யார்த்தங்களை அறியாதவர்கள்

யாகத்தில் பிராணிஹிம்ஸை விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஜீவகாருண்ய தர்மத்தை அனுஷ்டிக்க விதிக்கவில்லையென்றும் வேதத்தை முற்கால முதல் பௌத்தர்கள் நிந்திக்கிறார்கள். பிராணி ஹிம்ஸை செய்ய விதிக்கும் வேதமும் எவ்விதம் ஞானத்தை உண்டாக்கும் என்று நிந்திக்கிறார்கள். சாஸ்திரங்களையும் புராணங்களையும் நாம் செம்மையாக விசாரித்துப் பார்த்தால் மேல் ஆக்ஷேபணைகள் நிலைநிற்கமாட்டா என்று அறிந்துகொள்ளலாம். பிராணிகளை ஹிம்ஸிக்கக்கூடாது, என்பதுதான் முக்கிய தர்மமாக வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஹிம்ஸை, மானஸிகம், வாசிகம், காமாகம் என்று 3 விதம். மனதால் கூட மற்ற பிராணிகளை ஹிம்ஸை செய்யக்கூடாது. வாக்கினால் ஹிம்ஸை செய்யும்படி உத்திரவு கொடுக்கக் கூடாது. ஸ்வயமாக ஹிம்ஸிக்கக் கூடாது. கொல்லப்பட்ட மிருகங்களின் மாமிசத்தையும் சாப்பிடக் கூடாது. மாம்ஸத்தை கிரயத்திற்கு வாங்கி சாப்பிடவும் கூடாது என்று பலவாராக பிராணி ஹிம்ஸையை நிந்தித்து மாம்ஸபக்ஷணம் செய்யாதவன் 100 அசுவமேதம் செய்த இந்திரனுக்கும் ஸமானமானவன் என்றும் உத்தம க்ஷேத்திரங்களில் தீர்த்தயாத்திரை செய்தவனுக்கும் சமானமானவன் என்றும் ஹிம்ஸை செய்யாதவர்களை ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருக்கிறது

अहिंस्रः सर्वभूतानां यथा माता यथा पिता ।
अहिंस्रस्य तपोऽक्षय्यमहिंस्रो यजते सदा ॥

भा० आनुशा० पर्व. ११५. ४०.

मासि मास्यश्वमेधेन यो यजेत शतं समाः ।
न खादति च यो मांसं मतमेतन्मतं मम ॥ ११५. १६.

பிராணி ஹிம்ஸை செய்யாதவனை எல்லாப் பிராணிகளும் சரணம் அடைகின்றன. ஆகையால் ஜீவஹிம்ஸை செய்யக்கூடாதென்பதே முதல் தர்மமாக விதிக்கப்பட்டிருக்

கிறது. எல்லாப் பிராணிகளிடத்திலும் ஈசுவர அம்சம் ஏற்பட்டிருக்கிறது. அம்சதாரதம்யத்தால்தான் பிராணி தார்தம்யபுத்தி ஏற்படுகிறது. உலகத்திலுள்ள எல்லா பதார்த்தங்களும் 96 தத்வங்களுக்குள் அடங்கியவை. அவைகளின் புத்தி தாரதம்யத்தால் சில பிராணிகளிடத்தில் தத்வங்கள் ஜாஸ்தியாகவும், சில ஜந்துக்களிடத்தில் தத்வங்கள் கம்மியாகவும் பிரகாசிக்கின்றன. எல்லா பிராணிகளிலும் ஈசுவரக்களிருப்பதால் பிராணிகளுக்கு துரோஹம் செய்வது ஈசுவரனை ஹிம்ஸிப்பதாகும். ஈசுவரன் ரூபத்தில் ஒரு பாகத்தை ஹிம்ஸித்து மற்றொரு பாகத்தை பூஜித்தால் ஈசுவரனுக்கு திருப்தி உண்டாகுமா? என்று பாகவதம் 3 ஸ்கந்தத்தில் சொல்லப்படுகிறது. இந்த ரஹஸ்யத்தை அறிந்து அபயதானம் கொடுத்தவர்களில் சிரேஷ்டரான சிபி சக்ரவர்த்தி ஒரு புறாவை ரக்ஷிக்க தன் தேகத்தைக் கொடுத்துவிட்டார். ததீசிமஹர்ஷி தேவர்களை ரக்ஷிப்பதற்குத் தனது தேகத்தின் எலும்பைக் கொடுத்துவிட்டார்.

सर्वभूतेषु यो विद्वान् ददात्यभयदक्षिणाम् ।
भवति लोके सः प्राणान्भं नात्र संशयः ॥ आनुशा. ११५-२०

விருத்த பிராமண கன்னிகையை வியாக்கிரத்தினிடமிருந்து காப்பாற்ற ஒரு அரசன் தன் தேஹத்தை ரம்பத்தால் தன் பாரியை புத்திரன்களால் அறுக்கும்படி செய்து கொண்டான் என்று ஜைமினீ பாரதம் அசுவமேத பர்வத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிராணி ஹிம்ஸையைச் செய்யாமலிருப்பதுதான் சாஸ்திரத்தின் முக்கியக் கருத்து.

(இன்னும் வரும்.)

பி. வி. கிருஷ்ணசாமி அய்யர்.

புத்தகவரவு.

உபநிஷத்பஞ்சகம்.

இப்புத்தகம் சென்னை அடையார் லைப்ரரியின் ஸம்ஸ்கிருத பண்டிதரான நா. ராமனுஜ சாஸதிரிகளால் ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றது. இதில் உள்ள ஐந்து உபநிஷத்துகளும் கர்ப்போற்பத்தி ஸ்வரூபத்தையும் கர்ப்பத்தில் பிராணிகளிருக்கும் ரீதி முதலியவற்றையும், பசு, பதி இவற்றின் ஞானத்தையும், விபூதி ஊர்த்வபுண்ட்ரம் இவற்றின் மகிமை தாரணம் செய்துகொள்ளவேண்டிய முறை. ஸ்தானம் முதலியவற்றையும், யோகம் ஸந்நியாஸம் இவற்றின் இலக்ஷணம் முதலியவற்றையும் அதிகாரி பேதத்தையும் விஸ்தாரமாய் நிரூபிக்கின்றன. ஸம்ஸ்கிருத பாஷையிலிருக்கும் இவ்வுபநிஷத்துகளைப் பார்க்கும் திறமையற்றவர்களுக்குக்கூட இது மிகவும் உபயோகமாயிருக்குமென்று நினைக்கிறோம்.

ஹரிச்சந்திரன்.

இந்நூல் கும்பகோணம் டவுன் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஊ. சா. வெங்கடராமய்யரால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் பிராசீனமாயும் சிறந்ததாயுமிருக்கும் திருக்குறள் முதலிய சில நூல்களிலிருந்து அங்காங்கு ஸந்தர்ப்போசிதமாய் சில செய்யுட்களும் இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸத்தியத்தின் அனுஷ்டானமும் அதை நெறி தவறாது அனுஷ்டிப்பதால் ஏற்படும் பயனும் ஹரிச்சந்திரனுடைய சரிதத்தில் கூறப்படுகின்றதென்பது யாவர்க்கும் வெளிப்படையாய்த் தெரிந்த விஷயம். ஸத்தியத்தின் அனுஷ்டானம் மிகவும் குறைவடைந்த இக்காலத்தில் அச்சரித்திரத்தை நம் தேச பாஷையில் சுருக்கமாய் வெளியிடும் இந்நூலானது பாலர் முதல் ஸகல ஜனங்களுக்கும் உபயோகமுள்ளதாகையால் இது அவசியம் பார்க்கத் தகுந்தது.

கல்வி.

இது மதுரையிலிருந்து ஒவ்வொரு மாதமும் வெளியாகும் ஓர் தமிழ் பத்திரிகை. இதில் உலக வியவகாரங்களும் சாஸ்திரீயமான தர்மங்களும் மற்றும் சில நீதிகளும் வெளியிடப்படுகின்றன. "கல்வி" என்று இதற்கு வாய்ந்த மிகவும் சிறந்ததான இப்பெயரே கேழ்ப்பவர்களுக்கு விசேஷ திருப்தியை உண்டு பண்ணுகிறது. இத் தமிழ் நாட்டின்கண் வஸிக்கும் ஜனங்களுக்கு இத்தேச பாஷையான எளிய தமிழ் நடையில், வெளிவரும் இதுபோன்ற பத்திரிகைகளே படிப்பதற்குத் திருப்தியாயும் எவ்வித கடினமான விஷயங்களையும் சுலபமாய் அறிந்து அதின் பயனை அடைவதற்கு உயர்ந்த ஸாதனமாகவும் ஆகுமென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வித பத்திரிகைகள் இந்நாட்டில் சரியாய் நடைபெற்றுவருமாயின் தற்காலம் ஏற்பட்டிருக்கும் தர்மக்குறைவு நிவர்த்தியடைந்து கூடிய சீக்கிரம் எங்கும் தர்மாபிவிருத்தி ஏற்படலாம்.

இந்திய சிற்பசாஸ்திரம்.

சென்னையில் Mr. M. A. அனந்தாழ்வார் B.A.B.C.E. A.V. தியாகராஜய்யர் இவர்களால் நம் பிராசீன சாஸ்திரங்

களிலிருந்து கண்டெடுத்துத் தக்க ஆராய்ச்சியுடன் வெளியிடப்படும். "Indian Architecture" என்னும் நூல் Mr. M.S. சுந்தரசர்மா அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு Mr. S. நாகராஜய்யரால் "இந்திய சிற்பசாஸ்திரம்" என்ற பெயருடன் முப்பது பாகங்களாக மதுரையிலிருந்து பிரசுரிக்கப்படுகிறது. நம் சாஸ்திரங்களிலுள்ள அருமையான விஷயங்களை யறியவேண்டுமென்னும் எண்ணமே அருமையாய்விட்ட இக்காலமே நம் சாஸ்திரங்களிலே தான் பல இனிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன வென்று அவற்றின் ஸாரத்தை ஊட்டி தெளிவு பெறச் செய்யும் இப்புத்தகம் வெளியுலாவ ஏற்றகாலம். இது சிற்பகலையின் நம் பிராசீன சாஸ்திர முறைகளையும் நவீன முறைகளையும் முக்கியமாக நன்றாய் விளக்கிக்காட்டுவதோடு அம்முறைகளின்படி நல்ல வேலைத்திறமமைந்த பல ஆலயம் முதலிய கட்டிடங்களின் சித்திரப்படங்களும் இதில் காணப்படுகின்றன. தவிற பூபாகத்தின் அநேக முக்கிய ஸ்தல விசேஷங்களையும் புண்ணிய ஸ்தலங்களின் மகிமையையும் இந்நூல் விஸ்தாரமாய் வெளியிடுகின்றது. இது நம்பழமையான சாஸ்திரங்களில் அநேக ஸூக்ஷ்மவிஷயங்கள் அடங்கியிருப்பதை ஆராயும்படி தேச நண்பர்களைத் தூண்டும் ஓர் கருவி என்றே சொல்லலாம். ஆதலின் தேச பாஷையிற் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவரும் இப்புத்தகம் ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியதென்று நாம் சொல்லவும் வேண்டுமோ?